RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 80 | மார்ச்.29 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# திமுகவின் 164 வேட்பாளர்கள் அறிவிப்பு : முழு பட்டியல்

சென்னை: மார்ச்.29-

164 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

சென்னையில் நிருபர்களை சந்தித்த முதல்வர் ஸ்டாலின் திமுக வேட்பாளர் பட்டியலை வெளியிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது:

திமுக 164 தொகுதிகளில் போட்டியிடுகிறது.கூட்டணி கட்சிகள் 11 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறது. 175 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்திலும், 59 தொகுதிகளில் கூட்டணி கட்சி சின்னங்களிலும் போட்டியிடுகிறோம்.

கன்னியாகுமரி மகேஷ்
நாகர்கோயில் ஆஸ்டின்
ராதாபுரம் அப்பாவு
பாளையங்கோட்டை அப்துல் வஹாப்
நெல்லை சுப்பிரமணியன்
ஆலங்குளம் பால் மனோஜ் பாண்டியன்
தென்காசி கலை கதிரவன்
வாசுதேவல்லூர் ராஜா
கோவில்பட்டி கருணாநிதி
ஓட்டப்பிடாரம் ராமஜெயம்
திருச்செந்தூர் அனிதா ராதாகிருஷ்ணன்
தூத்துக்குடி கீதாஜீவன்
விளாத்திகுளம் மார்கண்டேயன்
முதுகுளத்தூர் ராஜகண்ணப்பன்
ராமநாதபுரம் காதர்பாட்சா என்ற முத்துராமலிங்கம்
திருச்சுழி தங்கம் தென்னரசு
அருப்புக்கோட்டை கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன்
சாத்தூர் கடற்கரை ராஜ்
கம்பம் ராமகிருஷ்ணன்
போடி ஓபிஎஸ்
ஆண்டிப்பட்டி மகாராஜன்
திருமங்கலம் சேடபட்டி மணிமாறன்
திகுன்றம் கிருத்திகா
மதுரை மேற்கு ரகுபாலாஜி
மதுரை மத்தி தியாகராஜன்
மதுரை வடக்கு தளபதி
சோழவந்தான் வெங்கடேசன்
மதுரை கிழக்கு மூர்த்தி
மானாமதுரை தமிழரசி
திருப்பத்தூர் பெரிய கருப்பன்
ஆலங்குடி மெய்யநாதன்
திருமயம் ரகுபதி
புதுக்கோட்டை முத்துராஜா
விராலிமலை செல்லபாண்டியன்
பேராவூரணி அசோக்குமார்
பட்டுக்கோட்டை அண்ணாதுரை
ஒரத்தநாடு வைத்தியலிங்கம்
தஞ்சை ராமநாதன்
திருவையாறு துரை சந்திரசேகரன்
கும்பகோணம் சாக்கோட்டை க அன்பழகன்
திருவிடைமருதூர் கோவி செழியன்
திருவாரூர் பூண்டி கே கலைவாணன்
மன்னார்குடி டிஆர்பி ராஜா
வேதாரண்யம் புகழேந்தி
பூம்புகார் நிவேதா முருகன்
புவனகிரி துரை கே சரவணன்
குறிஞ்சிப்பாடி எம்ஆர்கே பன்னீர்செல்வம்
நெய்வேலி ராஜேந்திரன்
திட்டக்குடி (தனி) சிவி கணேசன்
ஜெயங்கொண்டம் கண்ணன்
அரியலூர் லதா பாலு
குன்னம் சிவசங்கர்
பெரம்பலூர் (தனி) ஜெயலட்சுமி
முசிறி கருணை ராஜா
மண்ணச்சநல்லூர் கதிரவன்
லால்குடி பாரிவள்ளல்



திருவெறும்பூர் அன்பில் மகேஷ்
திருச்சி கிழக்கு இனிகோ இருதயராஜ்
திருச்சி மேற்கு கேஎன் நேரு
ஸ்ரீரங்கம் துரைராஜ்
குளித்தலை சந்திரன்
கிருஷ்ணராயபுரம் (தனி) ராஜா
கரூர் தியாகராஜன்
அரவக்குறிச்சி இளங்கோ
வேடச்சந்தூர் சாமிநாதன்
திண்டுக்கல் ஐபி செந்தில்குமார்
நிலக்கோட்டை (தனி) நாகஜோதி
ஆத்தூர் ஐ.பெரியசாமி
ஒட்டன்சத்திரம் சக்கரபாணி
மடத்துக்குளம் ஜெயராம கிருஷ்ணன்
உடுமலைப்பேட்டை ஜெயக்குமார்
வால்பாறை (தனி) சுதாகர்
கிணத்துக்கடவு சபரி கார்த்திகேயன்
கோவை தெற்கு செந்தில் பாலாஜி
தொண்டமுத்தூர் கார்த்திகேயன்
கோவை வடக்கு செந்தமிழ்ச் செல்வன்
சூலூர் முருகேசன்
பல்லடம் செல்வராஜ்
திருப்பூர் தெற்கு தினேஷ்குமார்
திமுக கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி பட்டியல் வெளியீடு
திமுக கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி பட்டியல் வெளியீடு
அவிநாசி (தனி) கோகிலாமணி
மேட்டுப்பாளையம் கவிதா
குன்னூர் ராஜூ
கூடலூர் (தனி) திராவிட மணி
கோபி நல்லசிவம்
அந்தியூர் சிவபாலன்
பவானி சேகர்
பெருந்துறை தோப்பு வெங்கடாசலம்
காங்கேயம் சாமிநாதன்
தாராபுரம் (தனி) இந்திராணி
ஈரோடு மேற்கு முத்துச்சாமி
குமாரபாளையம் பாலு
பரமத்தி வேலூர் மூர்த்தி
நாமக்கல் ராணி
சேந்தமங்கலம் (தனி) பூமலர்
ராசிபுரம் (தனி) மதிவாணன்
வீரபாண்டி தருண்
சேலம் தெற்கு லோகநாதன்
சேலம் வடக்கு ராஜேந்திரன்
சங்ககிரி மணிகண்டன்
எடப்பாடி காசி
மேட்டூர் மிதுன் சக்கரவர்த்தி
ஏற்காடு (தனி) ரேவதி
கெங்கவல்லி (தனி) சின்னதுரை
சங்கராபுரம் உதயசூரியன்
ரிஷிவந்தியம் வசந்தம் கார்த்திகேயன்
உளுந்தூர்பேட்டை வசந்தவேல்
திருக்கோவிலூர் பொன் கவுதம சிகாமணி
விக்கிரவாண்டி சிவ சண்முகம்
விழுப்புரம் லட்சுமணன்
வானூர் (தனி) கவுதம் திராவிடமணி
செஞ்சி மஸ்தான்
வந்தவாசி (தனி) அம்பேத்குமார்
செய்யாறு ஜோதி
ஆரணி மகாலட்சுமி
கலசப்பக்கம் சரவணன்
கீழ்பெண்ணத்தூர் பிச்சாண்டி
திருவண்ணாமலை எ.வ.வேலு
செங்கம் கிரி
அரூர் சண்முகம்
பாப்பிரெட்டிப்பட்டி பழனியப்பன்
பாலக்கோடு செந்தில்குமார்
ஒசூர் சத்யா
வேப்பனஹள்ளி சீனிவாசன்
பருகூர் மதியழகன்
திருப்பத்தூர் நல்லதம்பி
ஜோலார்பேட்டை கவிதா தண்டபாணி
ஆம்பூர் வில்வநாதன்
கீழ்வைத்தினான்குப்பம் (தனி) ராஜேஸ்வரி
அணைக்கட்டு நந்தகுமார்
வேலூர் கார்த்திகேயன்
ஆற்காடு ஈஸ்வரன்
ராணிப்பேட்டை வினோத் காந்தி
காட்பாடி துரைமுருகன்
காஞ்சிபுரம் நித்யா
உத்திரமேரூர் சுந்தர்
மதுராந்தகம் (தனி) அமலு பொன்மலர்
செங்கல்பட்டு கார்த்திக் தண்டபாணி
தாம்பரம் கிருத்திகா தேவி
ஆலந்தூர் தா,மோ.அன்பரசன்
சோழிங்கநல்லூர் அரவிந்த் ரமேஷ்
மயிலாப்பூர் வேலு
தியாகராய நகர் ராஜா அன்பழகன்
சைதாப்பேட்டை மா.சுப்பிரமணியன்
விருகம்பாக்கம் பிராபகர் ராஜா
அண்ணாநகர் சிற்றரசு
ஆயிரம்விளக்கு எழிலன் நாகநாதன்
சேப்பாக்கம் உதயநிதி
துறைமுகம் சேகர்பாபு
ராயபுரம் சுபையர் கான்
எழும்பூர் தமிழன் பிரசன்னா
திருவிக நகர் (தனி) ரவிச்சந்திரன்
வில்லிவாக்கம் கார்த்திக் மோகன்
பெரம்பூர் ஆர்டி சேகர்
ஆர்கே நகர் எபினேசர்
மாதவரம் சுதர்சனம்
அம்பத்தூர் பூர்ணிமா
மதுரவாயல் கணபதி
ஆவடி நாசர்
பூந்தமல்லி கிருஷ்ணசாமி
திருவள்ளூர் ராஜேந்திரன்
கும்மிடிப்பூண்டி கோவிந்தராஜன்
கொளத்தூர் ஸ்டாலின்

## செல்லூர் ராஜூவை மீறி மதுரை வடக்கு தொகுதியில் சீட் பெற்ற டாக்டர் சரவணன்!

மதுரை, மார்ச்.29-

மதுரை வடக்கு தொகுதியில் வேட்பாளராக அறிவிப்பதற்கு முன்பே தேர்தல் பணிகளை தொடங்கிய டாக்டர் சரவணன், மாநகர் செயலாளர் செல்லூர் ராஜூவை மீறி கட்சித் தலைமை யின் நேரடி ஆசியுடன் சீட் பெற்றுள்ளார்.

மதுரை வடக்குத் தொகுதியில் திமுக மாநகரச் செயலாளர் தளபதி தற்போது எம்எல்ஏவாக உள்ளார். இங்கு அதிமுக 2 முறையும், திமுக கடந்த முறையும் வெற்றி பெற்றுள்ளது. மீண்டும் தளபதியே இந்த தொகுதியில் போட்டியிட உள்ளார்.

தொகுதியில் முகாமிட்டு மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளார். இந்த முறை அதிமுக இந்த தொகுதியை கைப்பற்றும் நோக்கில், முன்னாள் எம்எல்ஏ டாக்டர் சரவணனை நேற்று வேட்பாளராக அறிவித்துள்ளது.

சரவணன் அதிமுக மருத்துவர் அணி இணைச் செயலாளராக உள்ளார். ஏற்கெனவே திருப்பரங் குன்றத்தில் எம்எல்ஏவாக இருந்தவர். திமுகவில் 2021ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் 'சீட்' கிடைக்காததால் தேர்தல் நேரத்தில் பாஜகவில் சேர்ந்து அதிமுக கூட்டணியில் அக்கட்சி சார்பில் போட்டியிட்டு 50,094 வாக்குகளைப் பெற்றார்.

மாநகர திமுக செயலாளர் தளபதி 73,010 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இந்த முறை எப்படியும் சீட் வாங்கிவிடுவோம் என்ற நம்பிக் கையில், கடந்த 5 ஆண்டுகளாக தன்னுடைய மருத்துவமனை, டிரஸ்ட் உள்ளிட்டவை சார்பில் நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம்கள் நடத்தி மக்களிடம் நெருக்கம் காட்டி வந்துள்ளார்.



மாநகர அதிமுக செயலாளர் செல்லூர் ராஜூ, இவரை வடக்கு தொகுதிக்கு பரிந்துரை செய்யவில்லை. ஆனாலும் கடந்த மக்களவைத் தேர்தலில் அதிமுக முக்கிய நிர்வாகிகள் யாரும் மதுரை தொகுதியில் போட்டியிட முன்வராத நிலையில் டாக்டர் சரவணன், தனது சொந்தப் பணத்தை செலவு செய்து போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

மாநகர நிர்வாகிகளின் ஒத்துழைப்பு இல்லாததால், அதிமுக 3ம் இடத்துக்குச் சென்றது. அதனால், கட்சித்தலைமை இவருக்கு சட்டப்பேரவை தேர்தலில் வாய்ப்பு வழங்குவ தாக உறுதியளித்து இருந்தது. தலைமை கூறியது போலவே, தற்போது அவருக்கு சீட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பு, டாக்டர் சரவணனின் அரசியல் வாழ்க்கையில் முக்கிய மானதாக கருதப்படுகிறது. அதனால் அவர் திமுகவுக்கு கடும் போட்டியை கொடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளுங்கட்சி, வாக்காளர் கவனிப்பு போன்றவற்றால் இந்த முறையும் வெற்றி பெறலாம் என தளபதி திட்டமிட்டு வருகிறார். வடக்குத் தொகுதியில் திமுகஅதிமுக இடையே கடும் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## 5 முறை வென்ற போதிலும் நயினார் நாகேந்திரனுக்காக சாத்தூரை விட்டுக் கொடுத்த அதிமுக!

சாத்தூர், மார்ச்.29-

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் 5 முறை அதிமுக வெற்றிபெற்றபோதிலும் பாஜக தமிழக தலைவர் நயினார் நாகேந்திரன் போட்டியிட விரும்பி கேட்டதால், இத்தொகுதியை பாரதிய ஜனதா கட்சிக்கு அதிமுக விட்டுக்கொடுத்தது.

சாத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் 3 முறை இந்திய தேசிய காங்கிரஸூம், ஒரு முறை பார்வர்டு பிளாக் கட்சியும், 5 முறை அதிமுகவும், 4 முறை திமுகவும் வெற்றிபெற்றுள்ளன.

கடந்த 2006ல் திமுக சார்பில் போட்டியிட்ட சாத்தூர் ராமச்சந்திரனும், 2011ல் அதிமுக சார்பில் போட்டியிட்ட ஆர்.பி. உதயகுமாரும் வெற்றிபெற்றனர்.

2016 ல் அதிமுகவில் சுப்பிரமணியனும், 2019 இடைத்தேர்தலில் அதிமுக ராஜவர்மனும் வெற்றிபெற்றனர். கடந்த 2021 தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட மதிமுக வேட்பாளர் ரகுராமன் வெற்றிபெற்றார்.



ஜெயலலிதா இறப்புக்குப் பிறகு பழனிசாமி முதல்வரானதும் அதிமுகவில் விருதுநகர் மாவட்டம் கட்சி ரீதியாக இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிழக்கு மாவட்டச் செயலாளராக ரவிச்சந்திரனும், மேற்கு மாவட்டச் செயலாளராக முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜியும் நியமிக்கப்பட்டனர்.

இதன் பின்னர், அதிமுகவில் இரு கோஷ்டி ஏற்பட்டது. கடந்த 2016ல் இத் தொகுதி அதிமுகவுக்கு கொடுக்கப்பட்டபோது வெம்பக்கோட்டை கிழக்கு ஒன்றியச் செயலாளராக இருந்த எதிர்கோட்டை சுப்பிரமணியன் திமுக வேட்பாளர் சீனிவாசனை தோற்கடித்து வெற்றிபெற்றார்.

ஜெயலலிதா இறப்புக்குப் பிறகு டி.டி.வி.தினகரன் தொடங்கிய அமமுகவில் சுப்பிரமணியன் இணைந்தார். அவருடன் கட்சித் தாவலில் ஈடுபட்ட 18 எம்.எல்.ஏ.க்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

2019ல் மக்களவைத் தேர்தலுடன் சாத்தூர் சட்டப்பேரவை இடைத் தேர்தலும் நடத்தப்பட்டது. அப்போது அமமுக சார்பில் சுப்பிரமணியன் மீண்டும் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். அதிமுக சார்பில் போட்டியிட்ட ராஜவர்மன் வெற்றி பெற்றார்.

பின்னர் சுப்பிரமணியன், சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அப்போதைய முதல்வர் பழனிசாமி முன்னிலையில் மீண்டும் அதிமுகவில் இணைந்தார்.

இந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ரவிச்சந்திரன், ராஜவர்மன் ஆகியோர் சீட் பெற தீவிர முயற்சியில் இருந்தனர். ரவிச்சந்திரனுக்கே வாய்ப்பு அதிகம் என்ற சூழலில், சாத்தூர் தொகுதி பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டது.

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சாத்தூரில் போட்டியிட விரும்பி, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி யிடம் நேரடியாக கேட்டுள்ளார். கூட்டணி கட்சியின் தலைவர் என்ற முறையில் ரவிச்சந்திரனிடம் விட்டுக்கொடுக்கும்படி பழனிசாமி கேட்டுள்ளார்.

இதையடுத்து சாத்தூர் தொகுதி பாஜகவுக்கு கை மாறியது. ரவிச்சந்திரன் விரும்பி யிருந்தால், அருப்புக்கோட்டை அல்லது திருச்சுழி யில் போட்டி யிட்டிருக்கலாம்.

அத்தொகுதி நிர்வாகிகளுக்காக ஒதுங்கிக்கொண்ட ரவிச்சந்திரன் கூட்டணிக்காக சாத்தூரை விட்டுக் கொடுத்ததால், அவருக்கு உரிய முக்கியத்துவத்தை கட்சி வழங்கும் என கட்சியினர் எதிர்பார்க்கின்றனர்.

## "அதிமுக கூட்டணி 210 தொகுதிகளில் வெல்லும்; இபிஎஸ் முதல்வராவார்" எஸ்.பி.வேலுமணி

கோவை, மார்ச்.29-

"தமிழகம் முழுவதும் அதிமுக கூட்டணி 210 தொகுதிகளில் வென்று எடப்பாடி பழனிசாமி முதல்வராவார்" என முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்தார்.

அதிமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட பின் முதன்முறையாக கோவை வந்த, முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணிக்கு இன்று கோவை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை, கோவை மாவட்டத்தின் அதிமுக வேட்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் மேளதாளங்கள் முழங்க வரவேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த எஸ்.பி.வேலுமணி, "எடப்பாடி பழனிசாமி வெற்றிகரமான, வலுவான கூட்டணியை அமைத்து கோவை, திருப்பூர், நீலகிரி உட்பட அனைத்து மாவட்டங்களுக்கும் அதிமுக வேட்பாளர்களை அறிவித்துவிட்டார். கோவை மாவட்டம் என்றைக்குமே அதிமுகவின் கோட்டை. 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கோவை ஜெயலலிதாவின் ஆட்சியிலும், இபிஎஸ்சின் ஆட்சியிலும் வளர்ச்சியடைந்தது.

அதிமுக ஆட்சியில் கேட்ட திட்டங்களெல்லாம் கோவைக்கு வழங்கப்பட்டது. இதனால் கோவை மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்தது. கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் கோவைக்கு எந்த திட்டங்களும் வழங்கப்படவில்லை. அவிநாசி உட்பட கோவையின் 11 தொகுதிகளிலும், திருப்பூர், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் அதிமுக கூட்டணி முழுமையாக வெற்றிபெறும். தமிழகம் முழுவதும் அதிமுக கூட்டணி 210 தொகுதிகளில் வென்று எடப்பாடி பழனிசாமி முதல்வராக வருவார்.

மீண்டும் அதிமுக ஆட்சியமைந்ததும், இன்னும் விடுபட்ட திட்டங்களையெல்லாம் கோவைக்கு கொண்டுவருவோம். திமுக ஆட்சியில் அனைத்து வரியும் உயர்த்தப்பட்டுள்ளது, இதனை மக்கள் அனைவரும் உணர்ந்துள்ளனர். அதனால் அதிமுக கூட்டணி நிச்சயம் மிகப்பெரிய வெற்றிபெறும். நாங்கள் மக்களுக்கு கொடுத்துள்ள திட்டங்களை சொல்லி வாக்குகளை கேட்போம்" என்றார்.




# நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு உதவி

நீலகிரி, மார்ச்.,29-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு உதவி செலவின மேற்பார்வையா ளர்கள் தலைமையில் குழுக்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர் ஆட்சித்தலைவர் பார்வை யிட்டார்

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், உதவிச் செலவின மேற்பார்வையாளர்கள் தலைமையிலான குழுக்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து நடைபெற்ற பயிற்சி வகுப்பினை, மாவட்டத் தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பார்வையிட்டு, அறிவுரைகளை வழங்கினார்.

இப்பயிற்சியில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரி வித்ததாவது:

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளதை அடுத்து, தேர்தல் நடத்தை விதிமுறைகளின் ஒரு பகுதியாக கட்சி மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களைக் கண்காணிக்கும் பொருட்டு, 108உதகை சட்டமன்ற தொகுதி, 110குன்னூர் சட்டமன்ற தொகுதி, 109கூடலூர் சட்டமன்ற தொகுதி, உதவி செலவின மேற்பார்வையாளர்களின் தலைமையிலான குழுக்களான கண்காணிப்புக்குழு, நிலையான கண்காணிப்புக்குழு, காணொலி கண்காணிப்புக்குழு, காணொலி பதிவை பார்வையிடும் குழு, கணக்கீட்டு குழு, புகார்களை கண்காணிக்கும் குழு, உள்ளிட்ட பல்வேறு குழுக்களுக்கு தேர்தல் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பான பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி வகுப்பில், காணொலி கண்காணிப்பு பதிவு விவரம், பதிவுகளை பார்வையிடும் குழுக்கள் வழங்க வேண்டிய அறிவுரைகள், பதிவேடுகள் பராமரிப்பு, கணக்குகள் பராமரிப்பு, கண்காணிக்கப்பட்ட செய்திகள் அது குறித்து உரிய படிவத்தில் பூர்த்தி செய்து அறிக்கை அளிப்பது, எந்தெந்த படிவங்கள் மற்றும் எந்தெந்த பதிவேடுகள்

எதற்காக பயன்படுத்த வேண்டும் என்பதனையும் நன்றாக தெரிந்திருக்க வேண்டும். இப்பயிற்சியில் ஏதேனும் சந்தேகங்கள் இருக்கும் பட்சத்தில் அதனை கேட்டு தெரிந்து கொள்வதோடு மட்டுமின்றி, தேர்தல் ஆணையம் அறி வித்துள்ள வழிமுறைகள் அனைத்தையும், தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களும் நன்றாக தெரிந்து வைத்திருக்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் தெரி வித்தார்.

இந்நிகழ்வில், உதவி இயக்குநர் தணிக்கை உள்ளாட்சி நிதி சோமசுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) பாலச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ சென்னை,கொள்ளுமேடு, நபி கிரசன்ட் மெட்ரிகுலேஷன் ஸ்கூல், 28 வது ஆண்டு விழா மற்றும் கிண்டர் கார்டன் கிராஜுவேஷன் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்கள் கொள்ளுமேடு சிவில் சர்ஜன் ப்ளாக் மெடிக்கல் ஆபீசர் டாக்டர் பனிமலர், வேர்ல்ட் ரெக்கார்ட் ஹோல்டர், விஜய் டிவி கலக்கப்போவது யாரு செசன் ஐந்து டாக்டர். ஆழி செந்தில் பள்ளியில் விளையாட்டுப் போட்டிகள் தேர்வுகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகள் மற்றும் வருகை பதிவேட்டில் முதலிடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு மற்றும் கடந்த வருடம் பத்தாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த ஐந்து மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி உற்சாகப்படுத்தினர். பேச்சுப்போட்டி, ஆடல் பாடல் நிகழ்ச்சி மேலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் பள்ளி தாளாளர் கே.முகமது உசைன் மற்றும் துணை தாளாளர் கே.ஹெச். நூர்ஜகான் மற்றும் முதல்வர் தலைமை ஆசிரியர் துணை முதல்வர் பள்ளி நிர்வாக அதிகாரி மற்றும் ஆசிரியர்கள் வழங்கினார்கள். பள்ளி நிகழ்ச்சியில் மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஸ்ரீசீதா ஸ்ரீராமர் திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி

மாதவரம், மார்ச்.,29-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி சோத்துப்பாக்கம் கிராமம் ஸ்ரீ ஜெயதுர்கா நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஸ்ரீராமநவமி முன்னிட்டு ஸ்ரீசீதாஸ்ரீராமர் திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி ஆலய நிர்வாகிகள் சுரேஷ், ரஜினி, பிரபு, லதாபிரபு, சரவணன், பாலாஜி, பாபு ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் புன்யாக வாசனம்,சங்கல்பம், கலச ஆவாஹனம், விஷ்ணு சகாஸ்ரநாம பாராயணம், ஸ்ரீபஞ்ச சுக்த ஹோமம், மற்றும் மூலவர் பஞ் சமுக ஆஞ்சநேயருக்கும், ஸ்ரீசீதாதேவி ஸ்ரீராமர் உற்சவருக்கும் பல்வேறு வாசனை திரவியங்கல் அபிஷேகம் செய்து மகாதீபாரதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து





மேளதாள வாத்தியத்துடன் மூலமந்திரங்கள் முழங்க ஊர் பொதுமக்கள் முன்னிலையில் ஸ்ரீசீதா ஸ்ரீராமர் திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி வெகு விமர்ச்சியாக நடைபெற்றது. பின்னர் ஸ்ரீ விஷ்ணு ஸஹாஸ்ரநாம பாராயணம் மற்றும் நடனக்கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது






# ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சேம்பாரில் பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது

காளையார் கோவில் மார்ச் 29-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சேம்பாரில் பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது. வட்டார கல்வி அலுவலர்கள் பொன்னி மற்றும் லதா தேவி பள்ளி ஆண்டு விழாவிற்கு தலைமை ஏற்றனர். பள்ளி தலைமை ஆசிரியர் சுரேஷ் வரவேற்றார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராஜகோபால் வட்டார வள மையம் மேற்பார்வையாளர் கஸ்தூரிபாய் ஆசிரியர் பயிற்றுநர் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக ஜப்பான் நிட் கோ டெக்னாலஜி நிறுவனர் பிரபு , ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சேம்பார் முன்னாள் ஆசிரியர் சீனிவாசன் சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டனர். தலைமையாசிரியர் சுரேஷ் ஆண்டறிக்கை வாசித்தார். அனைத்து விருந்தினர்களுக்கும் பொன்னாடை



அணிவித்து நினைவு பரிசு வழங்கப்பட்டது. நல்லாசிரியர் விருது பெற்ற தலைமை ஆசிரியர் சுரேஷ் மற்றும் காளையார்கோவில் வட்டார ஆசிரியர்கள் பாராட்டு தெரிவித்தனர். பள்ளி ஆண்டு விழாவில் பள்ளியின் கடந்த ஆண்டு செயல்பாடுகள் வீடியோவாக ஒளிபரப்பப்பட்டது. பரதநாட்டியம், யோகா, சிலம்பம் ,நாடகம் , மற்றும் நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. கடந்த ஆண்டில் முதல் கற்றலில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கும் 100% வருகை புரிந்த மாணவர்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட காளையார் கோவில் வட்டார அனைத்து தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். சேம்பர் கிராமத்தின் சார்பாக சிறப்பு விருந்தினர்கள், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் பொன் துயில் அணிவித்து சிறப்பித்தனர். பட்டதாரி ஆசிரியர் முத்துக்குமார் நன்றியுரை கூறினார். ஆசிரியர்கள் காளீஸ்வரன், முருகன், சகாய செல்வி, பாரதி மலர் மற்றும் தனபாக்கியம் ஆகியோர் பள்ளி ஆண்டுவிழா நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தனர். விழா தொடங்கும் முன் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களுக்கும் பெற்றோர்களுக்கும் முன்னாள் மாணவர்களுக்கும் விளையாட்டு போட்டிகள் நடை பெற்றன. பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களும் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களும் பெற்றோர்களும் கிராம பொதுமக்களும் பள்ளி ஆண்டு விழாவில் முன்னின்று நடத்தினர். விழாவில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், சத்துணவு பணியாளர்கள் காலை சிற்றுண்டி பணியாளர்கள் சுகாதாரப் பணியாளர்கள் முன்னாள் மாணவர்கள் கிராம பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தலைவர் கலைஞர் அவர்களின் பால் மிகுந்த மரியாதை கொண்ட வழக்கறிஞர் வி.எம்.ஆசைத்தம்பி

சிவகங்கை மார்ச். 29-

சிவகங்கை மாவட்டம் கடந்த 17.3.1981 ல் பெரிய கண்ணனூர் எனும் கிராமத்தில் முத்துச்சாமித் தேவர் அரிய நாச்சியார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர் தான் இந்த வழக்கறிஞர் வி.எம். ஆசைத்தம்பி ...

தனது சிறுவயது பள்ளிப் படிப்பை மறவமங்கலம் . மல்லல் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் பயின்று . பின்னர் தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை இளங்கலை பொருளாதாரம் பட்டமும் பெங்களூர் சட்டக்கல்லூரியில் சட்டமும் படித்தவராவார்...

இவரது தாத்தா வீராச்சாமித் தேவர் தனது சொந்த கிராமமான பெரிய கண்ணனூர் கிராமத்தில் அப்போதைய சிவகங்கை மாவட்ட திமுக செயலாளர். திராவிடத் தென்றல் பசும்பொன் தா.கிருஷ்ணன் மற்றும் தற்போதைய மாவட்ட திமுக துணைச் செயலாளர் சேங்கைமாறன் முன்னாள் சிவகங்கை நகர் திமுக செயலாளர் ஆதி . அழகர்சாமி . காளையார்கோவில் முன்னாள் யூனியன் சேர்மன் வழக்கறிஞர் சண்முகம் . உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகளை அழைத்து வந்து கழக இரு வண்ணக் கொடியை ஏற்றி வைத்து அப்பகுதியில் கழகம் வளர்க்க பாடுபட்டவர்...

கழக இரு வண்ணக்



கொடியேற்றிய இடமானது வீராச்சாமித் தேவரின் பெயரில் உள்ளது...என்பது கழக மூத்த முன்னோடிகளுக்கு நன்றாக தெரியும்...

தலைவர் கலைஞரின் கொள்கை கோட்பாடுகளை உள்வாங்கி பல வெற்றித் திரைப்படங்களில் நடித்த கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நடிப்பால் ஈர்க்கப் பட்டு . அவரது தேமுதிகவில் பயணித்து . பல்வேறு பொறுப்புகளை வகித்து மக்கள் பணியாற்றி வந்தார்...

பின்னர் தேமுதிக விலிருந்து விலகி

ஓபிஎஸ் அணியின் முதல் தர்மயுத்த காலத்தில் ஓபிஎஸ் உடன் கழகப் பணியாற்றியவர்தான் இந்த வி.எம்.ஆசைத்தம்பி.

ஒன்றுபட்ட அதிமுகவின் மாநில மாணவரணி இணைச் செயலாளராக பொறுப்பேற்று திறம்பட பணியாற்றியவர்...

கொரணோ பேரிடர் காலத்தில் இவரது சொந்த கிராமமான பெரிய கண்ணனூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற பொது மக்களுக்கு இவரது சொந்த நிதியிலிருந்து காய்கறி . அரிசி . கிராமங்கள். தோறும் விநியோகித்து இப்பகுதியில் ஒரு நன்மதிப்பைப் பெற்றார்..

இதே போல் தேவகோட்டை நகரப் பகுதிகளிலும் காய்கறி மற்றும் அரசி . ஏழை எளிய ஆட்டோக்களுக்கு எரிபொருள் நிரப்பி அவர்களது வாழ்வாதாரத்தை காத்தவர்...

மேலும் இவர். மாணவர்களின் கல்வி . மற்றும் ஒவ்வொரு ஆண்டிலும் . ஏழை எளிய மாணவர்கள் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட பலருக்கும் கல்வி உதவிகளை சத்தமே இல்லாமல் செய்து வருகிறார்...

இவரது சமூக சேவைகளைப் பாராட்டி தமிழ்நாடு சர்வதேசப் பல்கலைக்கழகம் சேவை ரத்னா விருதும் . கௌரவ டாக்டர் பட்டமும் வழங்கி சிறப்பித்தது...

ஜெ மறைவிற்குப் பின் நடந்த பிரச்சினையில் ஓபிஎஸ் நடத்திய தர்ம யுத்தத்தில் சிவகங்கை மாவட்டத்தில் முதன் முதலில் ஓபிஎஸ் பக்கம் நின்றவர் ...

பின்பு பொதுக்குழுவால் ஓபிஎஸ் அவர்களை நீக்கிய போதும் சிவகங்கை மாவட்டத்தில் முதன் முதலில் நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர்களை அழைத்து கண்டன ஆர்ப்பாட்டத்தை தலைமையேற்று நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது...

இருந்த இடத்தில் விசுவாசமாக செயல்படுவது என்பது இவருடைய கூடுதல் பலமாகும்...

இவர் பல்வேறு நிலைப்பாட்டை காலச்சூழ்நிலையில் எடுத்திருந்தாலும் இவரது பரம்பரையினர் டாக்டர் கலைஞரின் பால் மிகுந்த மரியாதையும் பாசத்தையும் வைத்திருந்தனர் என்பதே நிதர்சனமான உண்மையாகும்..

அண்மையில் தான் தாய்க்கழகமாம் திமுக வில் ஓபிஎஸ் உடன் இவரும் மிக முக்கிய தளபதியாக தம்மை திமுக வில் இணைத்துக் கொண்டுள்ளார்...

# சிவகங்கை மாவட்ட திமுக வின் தி.பெஸ்ட் நகரச் செயலாளர் பெரி.பாலா என்ற பாலமுருகன்... முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்





தேவகோட்டை மார்ச்-29-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை திமுக நகரச் செயலாளராக கழகப் பணியாற்றி வருபவர் பெரி.பாலா என்ற பாலமுருகன் அம்பலம் ஆவார்...

கழகப் பணிகளை மாவட்ட திமுக செயலாளர். தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் ஆணை யின்படி கழகப்பணிகளை திறம்படச் செயலாற்றி வருபவர்...

தேவகோட்டை பெரிய.பாலமுருகன் குடும்பமானது ஒரு பெரிய அரசியல் பாரம்பரியத்திற்குச் சொந்தமானதாகவே விளங்கி வந்துள்ளது...

காரணம் . இவரது தாத்தா சுப்பராயன் அம்பலம் தேவகோட்டை

நகரத்தின் முதல் சேர்மனாக 1946 ல் மக்கள் பணியாற்றியுள்ளார் என்பது சுற்றுவட்டாரப் பொதுமக்கள் நன்கறிவர்...

இவருடைய தந்தையார் சுப.பெரியகருப்பன் அம்பலம் தேவகோட்டை நகர வீட்டு வசதி கூட்டுறவு சங்கத்தின் தலைவராக தொடர்ந்து தனது வாழ்நாளின் இறுதி வரையிலும் மக்கள் பணியாற்றி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது...

பெரி.பாலமுருகன் தனது சிறுவயது பள்ளிப் படிப்பை தேவகோட்டை நகரில் முடித்து தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரி கலைக்கல்லூரியில் இளங்கலை பட்டம் பெற்றார்...

தந்தை பெரியார். பேரறிஞர் அண்ணா . முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோரது கொள்கை சித்தாந்தங்களை உள்வாங்கியதன் காரணமாக தன்னை கடந்த 2006 ல் திமுக வில் இணைத்துக் கொண்டார்...

கழகப் பணிகளை தொய்வின்றி செய்ததன் காரணமாக சிவகங்கை திமுக மாவட்ட நெசவாளரணி அமைப்பாளராகவும் . பின்னர் தேவகோட்டை நகர திமுக செயலாளராக தொடர்ந்து பதினான்கு ஆண்டுகளாக இன்று வரை செயல்பட்டு வருகிறார்...

மேலும் இவர். தனது தேவகோட்டை நகரப்பகுதியில் தொடர்ந்து ஐந்து முறை நகர்மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்...

ஒரு முறை நகர்மன்ற துணைத் தலைவராகவும். சிவகங்கை மாவட்ட திட்டக்குழு உறுப்பினராகவும் தேர்வு செய்யப் பட்டுள்ளார்...

பலவருடங்களாக ஓடாத தேரான கண்டதேவி கோவில் தேரினை ஓடவைத்த பெருமை அப்போதைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரையேச் சாரும்...

ஆக . அத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்டதேவி தேரோட்டத்தை முன்நின்று நடத்திய தேவகோட்டை இருபத்தி இரண்டரை கிராமங்கள் அடங்கிய இரவுசேரி நாட்டு அம்பலகாரர் பெரியகருப்பன் அதாவது பெரிய.பாலமுருகனின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது...

தலைவர் கலைஞர் அவர்கள் அப்போதே பெரியகருப்பன் அம்பலத்தை அழைத்து பாராட்டி வாழ்த்தியதை எண்ணி இன்றளவும் அவரது மகன் பெரி. பாலமுருகன் தலைவர் கலைஞரை நினைத்து பெருமிதம் கொள்கிறார்...

கழகம் அறிவிக்கும் எந்த ஒரு போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் . மாவட்ட செயலாளர் கேஆர்.பெரியகருப்பன் இடும் கழகப்பணிகள் இப்படி எந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும் அதைத் தவறாது முழு மூச்சாக செய்து முடிப்பவர்... அதேபோல் கொரனோ காலகட்டங்களில் தேவகோட்டை நகர் முழுவதும் காய்கறி. அரிசி . பாய்கள் .போர்வை உள்ளிட்ட அத்தியாயப் பொருட்களை தனது சொந்த செலவில் செய்து கொடுத்துள்ளார்..

அதேபோல் தேவகோட்டை நகரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒரு பாரம்பரிய குடும்பத்தைச் சேர்ந்த இவர் சாதி மத வேறுபாடின்றி அனைத்து தரப்பு மக்களிடமும் அன்பாகச் பழகுபவர் . இவர் எந்த ஒரு அகங்கார மனப்பான்மையோடும் பழகாதவர்...

மேலும் பெரி. பாலா விடம் நாம் பேசும் போது தலைவர் கலைஞரின் உயரிய சிந்தனையான சமுதாய ஒற்றுமை. கொள்கைகள் . நினைவாற்றல். உள்ளிட்ட பல விசயங்களை நினைவுபடுத்தினார்... அப்பேற்பட்ட தலைவர் கலைஞரின் பொற்கால ஆட்சியினை வழங்கிக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மீண்டும் 2026 தேர்தலிலும் வெற்றி வாகை சூடுவார்...

அந்த நாளுக்காகத்தான் ஒட்டுமொத்த தமிழகமே காத்துக் கொண்டிருக்கிறது எனவும் பேசினார்...

கடந்த ஆண்டு சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகருக்கு வருகைதந்த

தமிழ்நாடு முதலமைச்சர் . கழகத்தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். சிவகங்கை மாவட்ட கள ஆய்வின்போது நடைபெற்ற சிவகங்கை மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் இவரது செயல்பாடுகளை பாராட்டி முதலமைச்சர் சிறந்த நகரச் செயலாளர் என வெகுவாகப் பாராட்டிச் சென்றுள்ளார் என்பது இவரது பொதுவாழ்க்கைக்கு கூடுதல் சிறப்பாகவே அமைந்துள்ளது ...

மேலும் மாவட்ட செயலாளர்.அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் முன்னாள் அமைச்சர் தென்னவன் ஆகியோரது பேரன்பைப் பெற்றவராகவே திகழ்கிறார்...

கடந்த காலங்களில் மேனாள் அமைச்சர் தென்னவன் மூலமாக இந்த கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்ட நாள் முதல் இன்றளவும் நட்பு சிறிதேனும் குன்றாமல் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது...

இவரது கழகப்பணிகள் சிறக்க நமது மனமார்ந்த நல் வாழ்த்துகளையும் . பாராட்டுகளையும் தெரிவிக்கின்றோம்...



■ சிவகங்கை சட்டமன்ற தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக போட்டி யிட, வெற்றியூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும், முன்னாள் கல்லல் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர், விடுதலை சிறுத்தைகள் கட்சி சிவகங்கை நாடாளுமன்ற மண்டல துணைச் செயலாளர் ( பொது நிர்வாகம்) சங்கு உதயகுமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, சென்னை அம்பேத்கர் திடல் தலைமை அலுவலகத்தில் விருப்ப மனு அளித்தார். சட்டமன்ற உறுப்பினர் எஸ். எஸ்.பாலாஜி, திருப்பத்தூர் தொகுதி மாவட்ட துணை செயலாளர் கொத்தரி வீரபாண்டி, மானாமதுரை தொகுதி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வே. பாலையா, சிவகங்கை தொகுதி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வெற்றி.விஜயன், மானாமதுரை தொகுதி மாவட்ட பொருளாளர் ஆதிவளவன் ஆகியோர் உடனிருந்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 ஐ முன்னிட்டு 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் அரசியல் கட்சி பிரமுகர்களுக்கு வேட்பமனு தாக்கல் செய்வது தொடர்பான கூட்டம், தேர்தல் நடத்தும் அலுவலர் / குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



■ 178 கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி கறம்பக்குடி தாலுகா மற்றும் கரம்பக்குடி தாலுகா, ரெகுநாதபுரம் ஆக்ஸிலியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு ரவி தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று 27.03.2026 நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் கரம்பக்குடி வட்டாட்சியர் திருமதி பிரவீனா மேரி, ஆக்ஸிலியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தாளாளர் மாக்னிபிக்காத், தேர்தல் துணை வட்டாட்சியர் திருமதி ஸ்டெல்லா, வட்ட துணை ஆய்வாளர் சுப்பிரமணியன் மற்றும் கரம்பக்குடி வருவாய் ஆய்வாளர் முருகேசன், மலையூர் வருவாய் ஆய்வாளர் திருமதி.உஷா மற்றும், அலுவலக பணியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள், கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.



## ஸ்ரீ கோதண்டராமர் ஆலயத்தில் ஸ்ரீராமநவமி பெருவிழா

மாதவரம், மார்ச்.29-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் புதிய எரிமைவெட்டிபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள பலநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ கோதண்டராமர் ஸ்வாமி ஆலயத்தில் ஸ்ரீராமநவமி பெருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மூலவர்களுக்கு பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், தேன், ஜவ்வாது உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து பின்னர் வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாரதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் மேளதாள வாத்தியத்துடன் மூலமந்திரங்கள் முழங்க கிராம பொதுமக்கள் முன்னிலையில் ஸ்ரீராமநவமி வைபவம் நிகழ்ச்சி வெகு விமர்ச்சியாக நடைபெற்றது. அத்துடன் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி புகழை போற்றும் வகையில் ஆன்மீக சிந்தனைகள் கொண்ட சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவிற்கு முன்னாள் கவுன்சிலர் தீபாநாகராஜ், முன்னாள் ஆத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் சற்குணன் உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம்

செய்தனர்.முடிவில் ஆலயம் மற்றும் திருமலை நண்பர்கள் குழுவினர்கள் முழு ஒருங்கிணைப்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது.



## செங்குன்றத்தில் ஸ்ரீராமபிரான் நவமி சிறப்பு பூஜை பாதயாத்திரை திருவீதி உலா

மாதவரம், மார்ச்.,29-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றத்தில் இந்து கோயில் திருப்பணி பாதயாத்திரை குழு மற்றும் செங்குன்றம் பிரகண்டம் விஷ்வ இந்து பரிஷத் வட தமிழகம் சார்பில் ஸ்ரீ இராம நவமி பெருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ இராமபிரான் நவமி சிறப்பு பூஜை மற்றும் திருவீதி உலா பாதயாத்திரை நிகழ்ச்சி நடைபெற்றது. விஷ்வ இந்து பரிஷத் மாவட்ட செயலாளர் துரை இரவி தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் செங்குன்றம் ஸ்ரீ கோதண்டராமர் ஆலயத்தில் சிறப்பு பூஜைகள் செய்து உற்சவர் ஸ்ரீராமர் சிறப்பு அலங்காரத்துடன் லட்சுமியம்மன் கோயில் தெரு, பிடபில்யூடி தெரு, பிள்ளையாளர் கோயில் தெரு, பனையாத்தம்மன் கோயில் தெரு, மேட்டுதெரு, அண்ணாதெரு,வேணுகோபால்சாமி கோயில் தெரு உள்ளிட்ட முக்கிய பாதயாத்திரை வீதிஉலா நடைபெற்றது. இதில் தசரதன், மோகனகிருஷ்ணன், சந்தானகிருஷ்ணன்,வெங்கடேசன், ரமேஷ் உட்பட செங்குன்றம்நகர வி.எச்.பி பொறுப்பாளர்கள், கலந்து கொண்டனர்.இவ்விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கினர்.

## பூண்டிமாதா பேராலய தவக்கால திருச்சிலுவை அருளிக்கம் திருப்பயணம்



தஞ்சாவூர், மார்ச்.,29-

தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள மைக்கேல்பட்டி புனித அதிதூதர் ஆலயத்திலிருந்து தவக்காலத்தின் ஆறாம் வெள்ளியை முன்னிட்டு வெள்ளிக்கிழமை (மார்ச் 27) மாலை பூண்டிமாதா பேராலயத்தை நோக்கி திருச்சிலுவை அருளிக்க திருப்பயணம் நடைபெற்றது.

திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள பூண்டிமாதா பேராலயத்தில் ஏசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட மரத்தின் சிறு பகுதி புனித திருச்சிலுவை அருளிக்கமாக இறை மக்கள் வழிபட வைக்கப்பட்டுள்ளது. ஏசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மேற்கொண்ட பாடுகளை நினைவு கூறும்வகையில் ஆண்டு தோறும் மைக்கேல்பட்டி புனித அதிதூதர் ஆலயத் திலிருந்து திருச்சிலுவை அருளிக்கம் மக்கள் இறை பாடல்களுடன் திருக்காட்டுப்பள்ளி வழியாக பூண்டிமாதா பேராலயத்திற்கு பேரணியாக தவக்கால ஆறாம் வெள்ளியன்று கொண்டு வரப்படும். நிகழாண்டு தவக்கால திருச்சிலுவை திருப்பயணத்தை வெள்ளிக்கிழமை மாலை புனிதப்படுத்தி குடந்தை மறைமாவட்ட மேதகு. ஆயர் ஜீவானந்தம் அமலநாதன் துவக்கி வைத்தார்.பூண்டி மாதா பேராலய அதிபர்பி.ஜெ.சாம்சன், துணைஅதிபர் ஜெ.ருபன்அந்தோனி ராஜ், மைக்கேல்பட்டி மறைவட்ட முதன்மைகுரு எஸ்.இன்னசென்ட் முன்னிலை வகித்தனர். சுற்றுவட்ட பங்குத்தந்தையர்கள் மற்றும் மறைவட்ட மக்கள் திரளாக கலந்து கொண்டனர். ஊர்வலம் திருக்காட்டுப்பள்ளி வழியாக பூண்டிமாதா பேராலயத்தை அடைந்தது. இரவு பூண்டிமாதா பேராலயத்தில் சிறப்பு திருப்பலிபூசை மேதகு. குடந்தை ஆயர் ஜீவானந்தம் அமலநாதன் தலைமையில் நடைபெற்றது.இதில் பேராலய அதிபரும் பங்குத் தந்தையுமான பி.ஜெ. சாம்சன், துணைஅதிபர் ஜெ.ருபன்அந்தோணிராஜ், பூண்டிமாதா தியானமைய இயக்குனர் எஸ்.ஆல்பர்ட் சேவியர்,உதவித்தந்தைகள்எஸ். அருள்லாரன்ஸ்,எம். செல்வ குமார் ,ஆன்மீகதந்தைபி.ஜோஸப் மற்றும் ஏராளமான கிறிஸ்து வமக்கள் கலந்து கொண்டனர். பின்னர் திருச்சிலுவைப்பாதை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏராளமான கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்ட திமுக வில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக கழக விசுவாசியாகவே தொடரும் பள்ளத்தூர் கே.எஸ்.ஆர்

காரைக்குடி மார்ச்.,29-

சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் சட்டமன்றத் தொகுதி காரைக்குடி அடுத்துள்ள பள்ளத்தூர் கல்லூர் சேது அம்பலம் காந்திமதி அம்மாள் இணையருக்கு 1968 மகனாகப் பிறந்தவர் தான் பள்ளத்தூர் கே.எஸ். ஆர்.என்ற கே.எஸ்.ரவி ...

இளவயது பள்ளிப் படிப்பை முடித்து பின்னர் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் இளங்கலை வணிகவியல் பட்டம் பெற்று . பின்னர் அதே கல்லூரியில் 1986 ஆம் ஆண்டு அப்போதைய மாணவர் திமுக மாநிலச் செயலாளர் . தற்போதைய கழக பொதுச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் நன்மதிப்பைப் பெற்று காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் மாணவர் திமுக அமைப்பாளராக







கழகப்பணியாற்றிதோடு மட்டுமல்லாது துரைமுருகனை அழைத்து வந்து கல்லூரியில் கழக இரு வண்ணக் கொடியை ஏற்றிடச் செய்தவர்...

1987. ஆம் ஆண்டு வாக்கில் பள்ளத்தூர் நகர்க்கழக திமுக இளைஞரணி அவைத் தலைவராக இருந்த நேரத்தில் தான் இவரது இல்லத்தின் அருகே தற்போதைய முதலமைச்சர் அப்போதைய கழக இளைஞரணி செயலாளர் தளபதி மு.க.ஸ்டாலினை அழைத்து வந்து கழக இரு வண்ணக் கொடியை ஏற்றிடச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது...

1989 ஆம் ஆண்டு பேரூர் திமுக இளைஞரணி அமைப்பாளராக அன்பகத்தால் அறிவிக்கப்பட்டார்...

1989 களில் கழகம் . ஜானகி அணி. சிவாஜி கட்சி உள்ளிட்ட கட்சிகள் அறிவித்த பாரத் பந்த் தில் கல்லூரி மாணவராக இருக்கும் போதே பந்த்தில் பங்கேற்று கைதாகி . பின்னர் மதுரை மத்திய சிறைச்சாலையில் ஆறு நாட்கள் அடைக்கப்பட்டிருந்தார்...

1996 ல் நடைபெற்ற தேவகோட்டை இளைஞரணி பயிற்சி பாசறைக் கூட்டத்தை நடத்தி . பின் தளபதியின் கரங்களாலே பாராட்டுச் சான்றிதழ் பெற்றவராவார்...

1999 ல் அப்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர். சிவகங்கை மாவட்ட திமுக செயலாளர் பசும்பொன் தா.கிருஷ்ணன் தலைமையில் இவரது திருமணம் நடைபெற்றது...

மேலும் . பேரூர் திமுக வில் அவைத் தலைவராகவும் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஒருங்கிணைந்த சாக்கோட்டை ஒன்றியத்தில் இருந்து இரண்டு முறை தொடர்ந்து மாவட்டக்கழக பிரதிநிதியாகவும் பொறுப்பேற்று கழகப்பணிகளை திறம்படச் செயலாற்றியவர் தான் இந்த பள்ளத்தூர் கே.எஸ்.ஆர். எனும் கே.எஸ்.ரவி ...

திமுக அறிவிக்கும் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் தவறாது பங்கேற்கும் இவர் சிவகங்கை மாவட்டக்கழக செயலாளர் . அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் . முன்னாள் அமைச்சர் முகவை மு.தென்னவன் ஆகியோரது பேரன் பைப் பெற்று சிவகங்கை மாவட்ட திமுகவின் வரலாற்றில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாகவே வலம் வருகிறார்...

சாதி மதத்திற்கு அப்பாற்பட்டு ஏழை எளிய மக்களிடையே அன்பாகப் பழகக் கூடியவர்...

1991 முதல் சாக்கோட்டை ஒருங்கிணைந்த ஒன்றியத்தின் இளைஞரணி துணை அமைப்பாளராகவும்...

2001 முதல் 2011 வரையிலும் பத்து ஆண்டுகாலம் சிவகங்கை மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளராகவும் திறம்பட பணியாற்றியவர் ...

சாக்கோட்டை மேற்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினராகவும் . தற்போது மாநில தலைமைக் கழக பொதுக்குழு உறுப்பினராக கழகப்பணியாற்றி வருகிறார்...

சிவகங்கை மாவட்ட செயலாளர். அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் உண்மை விசுவாசியாக வலம் வந்து கொண்டிருக்கிறார்...

திருப்புத்தூர் தொகுதி சாக்கோட்டை ஒன்றியத்தில் அனைத்து தரப்பு மக்களையும் சாதி மதம் பேதமின்றி பழகும் தன்மை கொண்ட பள்ளத்தூர் ரவி விளம்பரமே இல்லாமல் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் கோவில் விழாக்களுக்கு என தாராளமாக தனது சொந்த நிதியிலிருந்து பல்வேறு உதவிகளை செய்து வருகிறார்...

இதுகுறித்து பள்ளத்தூர் கே.எஸ்.ரவி பேசும்போது தமிழகத்தில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சிதான் நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சிதான் எனவும். ..

திருப்புத்தூர் தொகுதியின் செல்லப் பிள்ளை மண்ணின் மைந்தன் செட்டிநாட்டு செல்லப் பிள்ளை எங்கள் அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்

மட்டுமே ...

அவர் தொகுதி முழுவதும் அனைத்து தரப்பு மக்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றி தீர்வு காண்பவர் எங்களது அமைச்சர் மட்டுமே...

மேலும் தொகுதியில் மீண்டும் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்பதே நிதர்சனமான உண்மையாகும்...

இவ்வாறு 44 ஆண்டுகளாக தொடர்ந்து ஒரே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தடம்புரளாது கழகப்பணிகளை மாண்புமிகு அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் முன்னாள் அமைச்சர் தென்னவன் ஆகியோரது வழிகாட்டலில் பயணம் செய்து கொண்டிருப்பவர்தான் இந்த பள்ளத்தூர் கே.எஸ். ஆர்....

கேஆர்.பெரியகருப்பன் மக்கள் பணிகளில் அவர் என்றெல்லாம் உறுதுணையாக இருந்து செயல்படுகிறார்...




■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டம், என்.ஜி.ஓ காலனி. உழவர் சந்தையில் பொதுமக்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "வாக்காளராக இருப்பதில் பெருமிதம் கொள்ளுங்கள் வாக்களிக்க தயாராகுங்கள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு விளம்பரப் பதாகையினை வைத்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அருகில் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் காயத்ரி வேளாண்மைத்துறை இணை இயக்குநர் கோவிந்தராஜ், வேளாண்மைத்துறை துணை இயக்குநர் .உமா , தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சதீஸ்பாபு அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாகேந்திரன் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.



## பர்கூரில் அதிமுக வேட்பாளர் கோவிந்தராஜ் எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

கிருஷ்ணகிரி, மார்ச். 29-

2026 சட்டமன்றத் தேர்தலுக்கான பர்கூர் தொகுதி அதிமுக வேட்பாளராக கோவிந்தராஜ் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நேற்று காலை பர்கூர் பேருந்து நிலையம் அருகே உள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு அவர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் ரவிச்சந்திரன், திருமால், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் பலர் கலந்து கொண்டு உற்சாகமாக ஆதரவு தெரிவித்தனர்.

## கிருஷ்ணகிரியில் அதிமுக வேட்பாளர் அசோக் குமார் எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

கிருஷ்ணகிரி, மார்ச். 29-

2026 சட்டமன்றத் தேர்தலுக்கான கிருஷ்ணகிரி தொகுதி அதிமுக வேட்பாளராக அசோக் குமார் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நேற்று ராசு வீதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு அவர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



இந்த நிகழ்ச்சியில் மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் பரிதா நவாப், இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே பி எம் சதீஷ்குமார், ஒன்றிய செயலாளர்கள் கன்னியப்பன், சூர்யா, பையூர் ரவி, சோக்காடி ராஜன், நகர செயலாளர்கள் கேசவன், விமல், மாவட்ட அமைப்புசாரா தொழிலாளர் அணி செயலாளர் ஆஜி, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன், அம்மா பேரவை தலைவர் தங்கமுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முனி வெங்கட்டப்பன்,மனோரஞ்சிதம் நாகராஜ், மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன், மாவட்ட இளைஞரணி கார்த்திக்,நகரத் துணைச் செயலாளர் குரு, மாவட்ட பிரதிநிதி கோவிந்தராஜ் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் பலர் கலந்து கொண்டு உற்சாகமாக ஆதரவு தெரிவித்தனர்.

## கிரைண்டர் ஆப் மூலம் வரவழைத்து வழிப்பறி

### சிவகங்கையில் 5 பேர் கைது

சிவகங்கை மார்ச். 29-

சிவகங்கை அருகே 'கிரைண்டர்' (Grinder) செயலி மூலம் இளைஞரை வரவழைத்து, கத்திமுனையில் தாக்கி வழிப்பறியில் ஈடுபட்ட ஐந்து பேர் கொண்ட கும்பலை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

சம்பவம் குறித்த விவரம்:

சிவகங்கை மாவட்டம், விஜயமாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த மோகன்துரை களஞ்சியம் (25) என்பவரது அலைபேசிக்கு, கடந்த 26.03.2026 அன்று கிரைண்டர் ஆப் மூலமாக சில நபர்கள் தொடர்பு கொண்டு பேசியுள்ளனர். அவர்கள் கொடுத்த தகவலின் பேரில், மோகன்துரை கொசவநடுப்பு கண்மாய் பகுதிக்குச் சென்றுள்ளார்.

அங்கு மூன்று இருசக்கர வாகனங்களில் காத்திருந்த ஐந்து பேர் கொண்ட கும்பல், மோகன்துரையைச் சூழ்ந்து கொண்டது. அக்கும்பல் அவரை கம்பு மற்றும் கத்தியால் தாக்கி, அவரிடமிருந்த மொபைல் போன் மற்றும் ஜிபே (G Pay) ரகசிய எண்ணைப் பறித்துக் கொண்டனர்.



மேலும், அவர் காதில் அணிந்திருந்த 1.5 கிராம் தங்கத்தோடு மற்றும் ரூ.1500 பணத்தையும் பறித்துக்கொண்டு தப்பிச் சென்றனர்.

சிகிச்சை மற்றும் வழக்குப்பதிவு:காயமடைந்த மோகன்துரை சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இது குறித்து சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் அடிப்படையில், குற்ற எண். 122/26 பிரிவு 310 (2) BNSன் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டனர்.கைது நடவடிக்கை:காவல்துறையினர் நடத்திய விசாரணையில், இந்த வழிப்பறி சம்பவத்தில் ஈடுபட்ட கீழ்க்கண்ட ஐந்து நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்:

* லட்சுமணன் (19), மலம்பட்டி. * அர்ஜுனன் (20), ஒக்கூபர் முகாம்.

* ஆதி (22), மலம்பட்டி. * சிவா (22), முத்துநகர். * ரித்திக் (எ) கலை (23), குமாரப் பட்டி.கைது செய்யப்பட்டவர்களிடம் காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## பழனி அதிமுக முன்னாள் எம்எல்ஏ வேணுகோபால் அவர்களின் முகநூல் பதிவால் அரசியல் வட்டாரத்தில் பேசும் பொருளாக மாறி உள்ளது

திண்டுக்கல் மார்ச். 29-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தாராபுரம் பகுதியைச் சேர்ந்த முன்னாள் எம்பி சேனாதிபதி கவுண்டர் அவர்களின் அரசியல் வாரிசாக, வேணுகோபால் அவர்களுக்கு தொகுதியில் தனிப்பட்ட செல்வாக்கு உள்ளது. 2011ல் அவர் பெற்ற வெற்றி, அந்தத் தொகுதியில் அதிமுகவின் பலத்தை நிரூபித்த ஒன்று.கடந்த 10 ஆண்டுகளாக அவர் கட்சிப் பணியில் தீவிரமாக இருந்தும், 2026 தேர்தலில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டது அவருக்குப் பின்னடைவாக அமைந்துள்ளது.

சமூக வலைதளப் "முதுகில் குத்தியவர்களுக்கு வாழ்த்துக்கள்" என அவர் பதிவிட்டது, கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிராகச் செயல்பட்டவர்கள் மீதான கோபத்தைக் காட்டுகிறது. இது போன்ற பதிவுகள் தொண்டர்கள் மற்றும் முகநூல் நண்பர்களிடையே விவாதங்களை உருவாக்கி, தேர்தல் நேரத்தில் கட்சிக்குச் சவாலாக அமையலாம்.பழனி சட்டமன்றத் தொகுதி அதிமுக அரசியல் வட்டாரத்தில் இந்த செய்தி தற்போது பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வேணுகோபால் அவர்களின் குமுறல், கட்சி மேலிடத்தின் மீதான அவரது அதிருப்தியை வெளிப்படையாகக் காட்டுகிறது.2021ல் போட்டியிட்ட ரவி மனோகர் அவர்களுக்கே மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது, தலைமை பழைய வேட்பாளரின் மீது நம்பிக்கை வைத்துள்ளதைக் காட்டுகிறது. இருப்பினும், வேணுகோபால் போன்ற சீனியர் தலைவர்களின் அதிருப்தி களப்பணியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று.

## அசோக் நகரில் சமூக பாதுகாப்பை வலுப்படுத்தும் விதமாக ஐ.சி.எல் ஃபின்கார்ப் நிறுவனம், அரிமா சங்கத்துடன் தமிழ்நாடு காவல்துறை இணைந்து அசோக் நகர் முழுவதும் 100 CCTV கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தபட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது

சென்னை மார்ச். 29-

சென்னை அசோக் நகரில்மக்களுக்குப் பாதுகாப்பை மேம்படுத்தவும், மேலும் வலுப்படுத்தவும் ஒரு முக்கியமான முயற்சியாக, ICL Fincorp நிறுவனம் Lions Club மற்றும் தமிழ்நாடு காவல்துறையுடன் இணைந்து, அசோக் நகர் முழுவதும் 100 CCTV கண்காணிப்பு கேமராக்கள் துவக்க விழா ICL Fincorp நிறுவனத்தின் முழுநேர இயக்குநர், தலைவர் மற்றும் முதன்மை செயல் அதிகாரி (சிணிளி) உமா அனில்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த முயற்சி, அப்பகுதியில் குடியிருப்போருக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் ICL Fincorp-இன் உறுதியை வெளிப்படுத்துவதோடு,





ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

R3 அசோக் நகர் காவல் நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி ஐ.சி.எல் ஃபின்கார்ப் (ICL Fincorp) நிறுவனத்தின் முதன்மை மேலாண்மை இயக்குநரும், (CMD) வழக்கறிஞர் அனில்குமார் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக தி. நகர் மாவட்ட காவல்துறை துனை ஆணையாளர் குத்தாலிங்கம், உதவி ஆணையாளர் ஆல்ட்ரின், R3 அசோக் நகர் காவல் நிலைய (L&O) ஆய்வாளர் சதீஷ்குமார் மற்றும் அரிமா சங்கம் மாவட்டம் 3241தி முன்னாள் மாவட்ட ஆளுநரும் கேபினெட் ஆலோசகருமான PMJF லயன் டாக்டர் மணிலால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தங்க நகைக் கடன் மற்றும் நிதிச் சேவைகளில் சிறந்து விளங்கும் முன்னணி NBFC நிறுவனமான ICL Fincorp, சமூக நலத் திட்டங்களில் தொடர்ந்து பங்கெடுத்து, பொதுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளின் நலனில் தனது உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

ICL Fincorp நிறுவனத்தின் இந்த முயற்சி, சிவிக் அமைப்புகள், காவல்துறை மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் ஆகியோரின் ஒருங்கிணைந்த முயற்சியாக தொடங்கப்பட்டுள்ளது; பொதுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், பாதுகாப்பான குடியிருப்புகளை உருவாக்கவும், அனைத்து குடிமக்களுக்கும் ஒரு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தவும் நோக்கமாகக் கொண்டு இம்முயற்சி தொடங்கப்பட்டுள்ளது என தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் காவல் துறையினர், ஃபின்கார்ப் நிறுவன அலுவலர்கள், அரிமா சங்க நிர்வாகிகள் உட்பட ஏராளமான சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161